# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

EDB SRI LANKA

**கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு**

# "Creative Sri Lanka 2030" வர்த்தக இணைப்பு (Business Link up) திட்டத்திற்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, மற்ற தொடர்புடைய தரப்புகளுடன் ஒருங்கிணைந்து 2026 ஆம் ஆண்டில் "Creative Sri Lanka 2030" திட்டத்தை முன்னெடுப்பதற்கு முன்மொழிகிறது. தேர்வு செய்யப்பட்ட இலங்கையின் பத்து (10) வர்த்தகக் குறிகளை நடவடிக்கை அமைப்பாகவும் (Umbrella Organizations), அதனுடன் இணைந்த சிறிய மற்றும் மத்திய அளவான தொழில்முயற்சியாளர்கள் (SMEs) 40–50 அளவானோரை மூலோபாய அடிப்படையிலும் நிலைப்படுத்தி சர்வதேச சந்தைக்கு வெற்றிகரமாக நுழையச் செய்வது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

படைப்பாற்றல் கொண்ட கைத்தொழில் துறையில் இருக்கும் வேகமான முன்னேற்றம் மற்றும் அதன் உலகளாவிய முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு தேசிய பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திக்கு தாக்கம் செலுத்த முடியுமான பிரதான துறை ஒன்றாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இந்தத் துறையை அடையாளம் கண்டுள்ளது. இதன்படி ஏற்றுமதி போட்டித் தன்மையை அதிகரிப்பது, புத்தாக்கங்களை ஊக்குவித்தல் மற்றும் படைப்பாற்றல் கொண்ட சிறப்புத் தன்மை மற்றும் பேண்தகு மதிப்பை உருவாக்கும் பிராந்திய மத்திய நிலையமாக இலங்கையை நிறுவும் இலக்குடன் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

**நோக்கம்:**

1. இலங்கையின் படைப்பாற்றல் கொண்ட 10 கைத்தொழில் வர்த்தகக் குறிகளை சர்வதேச அங்கீகாரம் பெற்ற வர்த்தகக் குறிகளாக மேம்படுத்தல் மற்றும் அந்தத் துறையின் இரண்டாம் நிலை சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களை வலுப்படுத்தல்
2. தார்மீக ரீதியான மற்றும் பேண்தகு உற்பத்திகளை மேம்படுத்துவது மற்றும் உயர் பெறுமதி சேர் விசேட உற்பத்தி (Niche products) ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு உச்ச பங்களிப்பு ஒன்றை பெற்றுக்கொடுத்தல்.
3. படைப்பாற்றல் கைத்தொழிலுக்காக புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்தல்.
4. படைப்பாற்றல் கொண்ட கைத்தொழில் தொடர்பில் சந்தையின் அறிதல் மற்றும் சந்தை ஊக்குவிப்பை மேம்படுத்தல்

**யாருக்கானது**

கைவினைப் பொருட்கள், பரிசுப் பொருட்கள் மற்றும் வாழ்க்கைமுறை தொழில்முறை (Handicrafts, Giftware and Lifestyle) போன்ற துறைகளில் ஈடுபட்டிருக்கும் ஏற்றுமதியாளர்கள், சாத்தியமான ஏற்றுமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள்/ தொழில்முயற்சியாளர்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்ட இரு பிரிவுகளின் கீழ் விண்ணப்பிக்க முடியம்.

1. படைப்பாற்றல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தித் திறன்கள் உள்ள, சமூகப் பொறுப்புக்காக அர்ப்பணித்திருக்கும் சிறிய மற்றும் மத்திய அளவான தொழில்முயற்சியாளர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட விரும்பும் பேண்தகு மற்றும் தார்மீக ரீதியான உற்பத்தியாளர்கள்.
2. படைப்பாற்றல் மேம்பாடு மற்றும் சந்தைக்கு நுழைவதற்கான பிரதான வர்த்தகக் குறி அமைப்புடன் (Umbrella Organizations) ஒத்துழைப்புடன் செயற்பட விரும்பும் சிறிய மற்றும் மத்திய அளவான வர்த்தகங்கள் (SMEs).

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பங்களை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 6ஆவது மாடியில் அமைந்துள்ள கைத்தொழில் உற்பத்தி பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு, www.srilankabusiness.com என்ற இணையதளத்தின் "Announcements" இல் இருந்தும் தரவிறக்கம் செய்ய முடியும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, உறையின் இடது பக்க மேல் மூலையில் "Creative Sri Lanka 2030" எனக் குறிப்பிட்டு, பணிப்பாளர், கைத்தொழில் உற்பத்தி பிரிவு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்ற முகவரிக்கு 2026 ஏபரல் 28ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

திட்டத்திற்காக பங்கேற்பவர்களை தேர்வு செய்வது ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபை ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு மங்களா மதுவன்தி அவர்கள் (அபிவிருத்தி அதிகாரி): 077 227 8196/ mangala@edb.gov.lk அல்லது ஷர்மிலா ஹேரத் அவர்கள் (ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரி), 078 674 8117/ shermi@edb.gov.lk, கைத்தொழில் உற்பத்திப் பிரிவை – 011 2300710/11 (நீடிப்பு 354) தொடர்புகொள்ளவும்.


**தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**NDB/EDB கோபுரம், 42, நவம் மாவத்தை, கொழும்பு 02.**
**தொலைபேசி: 011-2300705-11/ தொலைநகல்: 011-2300715 மின்னஞ்சல்: edb@edb.gov.lk/**
**இணையதளம்: www.srilankabusiness.com**